பதிவு எண்: M. 6311 ★ தொலைபேசி: 51331 ★ நிறுவியது: 1953 ★ ... ★ ... 10 ...

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன்

மலர்: 20 | சென்னை: ஐப்பசி 5 (21—10—72) சனி | வெளியூர்: ஐப்பசி 6 (22—10—72) ஞாயிறு | இதழ்: 106

இந்திய அரசு ஏமாற்றம்?

புதுடில்லி, அக். 11—
செல்வ வரி விதிப்பின் மூலம் 1971—72-ல் ரூ. 30 கோடி கிடைக்கும் என்று எதிர்பார்க்கப் பட்டது; ஆனால், ரூ 25 89 கோடி தான் கிடைத்திருக்கிறது; 1970—71-ம் ஆண்டில் வசூலான மொத்தத் தொகையைவிட இது ரூ 10 கோடி அதிகம் ஆகும்.
வேளாண்மைச் செல்வத்திற்கும் செல்வ வரி விரிவுபடுத்தப்பட்டி

(4-ம் பக்கம் பார்க்க)

மக்கள் தேவைகளை நிறைவேற்றுவதே முக்கியம்

தொலைநோக்கு திட்டங்கள் நாட்டுக்கு அவசியம்

இன்னல்களை நீக்கினால்தான் விரைவாகச் செயலாற்ற இயலும்

மாநிலத் திட்டக் கருத்தரங்கில்

முதலமைச்சர் கலைஞர் தெளிவுரை

சென்னை, அக். 21—
"மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களுக்குப் பிறகும் 60 சதவிகித மக்கள் வறுமையில் உழன்று கொண்டிருப்பதாக மதிப்பிடப்பட்டிருக்கிறது; கண்கூடான திட்டங்கள் மூலமாகத்தான் அவர்களுடைய வாழ்க்கை நிலைமையை உயர்த்த முடியும்; 'ஏழ்மையை ஒழிப்போம் -- வறுமையை விரட்டுவோம்' என்று முழங்கிக்கொண்டிருந்தால் மட்டும் போதாது; மக்களின் தேவைகளை நிறைவேற்றத் தொலைநோக்குத் திட்டங்கள் மிகமிக அவசியமாகும்.

"திட்டங்கள் தீட்டும்போது அடிப்படைக் காரணங்களை நாம் ஆராய்ந்திட வேண்டும்; திட்டங்களைச் செயல்படுத்தும்போது அதிலுள்ள சங்கடங்களை எப்படித் தவிர்ப்பது என்பதில் நிர்வாகத்தினர் முனைந்தால்தான் திட்டங்கள் விரைவில் முடிவடையும்.

"திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதமாகிறது -- நிதி போதவில்லை என்று சொல்லலாம்; அதற்கு மாறாக திட்டங்களை நிறைவேற்றுவதில் என்னென்ன இடைஞ்சல்கள் இருக்கின்றன என்பதை ஆராய்ந்து -- அதில் உள்ள இன்னல்களை நீக்கினால், திட்டங்களை விரைவாகச் செயல்படுத்த முடியும்; நிறைவேற்றுவதற்கான திட்டங்களை அனைவரும் ஆவலோடு எடுத்துக்கொண்டாலன்றி நிறைவேற்றிட முடியாது.

"தமிழ்நாட்டிற்குப் பல திட்டங்கள் தேவைப்படுகின்றன; ஏழை எளிய மக்களின் -- அடித்தளத்திலுள்ள மக்களின் எதிர்காலத்தை மனத்தில் வைத்துத் திட்டங்கள் தீட்டியாக வேண்டும்"

என்று முதலமைச்சர் கலைஞர் அவர்கள், தமிழ்நாடு மாநிலத் திட்டங்கள் பற்றி ஆராய்வதற்கான கருத்தரங்கைத் துவக்கிவைத்துப் பேசுகையில் சுட்டிக்காட்டிக் குறிப்பிட்டார்.

மின்சார உற்பத்திக்கு ரூ. 400 கோடி— மத்திய அரசிடம் தமிழ்நாடு கோரும்

"தமிழ்நாட்டில் கடுமையான மின்சாரப் பஞ்சம் ஏற்படுவதைத் தவிர்க்க மின்சார உற்பத்தித் திட்டங்களின் மீது முதலீட்டை அதிகரிக்கத் தமிழ்நாடு அரசாங்கம் விரும்புகிறது; 5-வது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் மாநிலத்தில் மின்சார உற்பத்திக்காக மேலும் ரூ. 400 கோடி ஒதுக்கும்படி மத்திய அரசைத் தமிழ்நாடு அரசு கேட்டுக்கொள்ளும்" என்றும் முதலமைச்சர் தெரிவித்தார்.

"நாளை திட்ட அமைச்சர் டி.பி. தார் சென்னைக்கு வருகிறார்; அப்போது அவருடன் நடத்தவிருக்கும் பேச்சுவார்த்தைகளில், 'பெரும் அனல் மின்சாரத் திட்டங்களை அனுமதிக்க வேண்டும்' என்ற கோரிக்கையைத் தமிழ்நாடு அரசு அளிக்கும்" என்றும் தெரிவித்தார்.

"தமிழ்நாட்டில் கடுமையான மின்சாரப் பற்றாக்குறை இருக்கிறது; எனவே, மின்சார உற்பத்திக்காக அடுத்த ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்ட தொகையான ரூ. 35 கோடியைவிட ரூ. 27 கோடி அதிகமாக மாநிலம் செலவிடுகிறது" என்றார்.

"மின்சார உற்பத்தி இயந்திரங்களைத் தாராளமாக இறக்குமதி செய்ய மத்திய அரசு அனுமதிக்க வேண்டும்; நீர் மின்சாரத் திட்டங்களுக்கான வசதிகள் ஏற்கனவே தீர்ந்துவிட்டதால் இனி அணு மின்சார -- அனல் மின்சாரத் திட்டங்களையே எதிர்கால வளர்ச்சிக்குத் தமிழ்நாடு நம்பியிருக்க வேண்டியிருக்கிறது" என்றும் சுட்டிக்காட்டினார்.

"திட்ட அமைச்சர் டி. பி தாருடன் நடத்தவிருக்கும் பேச்சுவார்த்தைகளில், சேலம் உருக்காலைத் திட்ட வேலையைத் துரிதப்படுத்தும் பிரச்சினை -- நெய்வேலியில் இரண்டாவது சுரங்கம் வெட்டுதல் -- சேதுசமுத்திரத் திட்டத்துக்கு அனுமதி வழங்கும் பிரச்சினையும் இடம் பெறும்" என்றும் முதலமைச்சர் தெரிவித்தார்.

வறுமையை ஒழிக்கும் திட்டங்களுக்கு இன்னமும் அனுமதி வழங்காததேன்?

"நெய்வேலியில் இரண்டாவது சுரங்கம் வெட்டுதல் -- சேது சமுத்திரம் திட்டம் போன்ற பெரிய திட்டங்களுக்கு மத்திய அரசிடமிருந்து இன்னமும் அனுமதி கிடைக்கவில்லை; மக்களுடைய வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதற்கும் -- வறுமையை ஒழிப்பதற்கும் இதுபோன்ற பெரிய திட்டங்கள் அவசியமாகும்" என்றும் சுட்டிக்காட்டினார்.

இக்கருத்தரங்கில், தொழில் நுட்ப வல்லுநர்கள் -- பொருளியலறிஞர்கள் மற்றும் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

தமிழ்நாடு திட்டக் குழுத் துணைத் தலைவர் எம். ஜி இராசாராம் தலைமை தாங்கினார்.

மாநிலத் திட்டக் குழு உறுப்பினர் என். மகாலிங்கம் -- தொழில் நுட்பப் பொருளாதாரக் கழக இயக்குநர் டாக்டர் பி. நடராசன், கோவை மாவட்ட கலெக்டர் ஜ. சிவகுமார் ஆகியோர் பேசினார்.

வேலையில்லாத் திண்டாட்டம் தீருவதற்கு வழி

முதலமைச்சர் மேலும் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"வேலையில்லாத் திண்டாட்டங்களை நல்ல திட்டங்களின் மூலமாகத்தான் போக்க முடியும்.

இன்றையத் தினம், கல்வி கற்ற பின் வேலை வாய்ப்பு கிடைக்கிறதா என்பதைப் பற்றி ஆராய்வதைவிட, கல்வி கற்கும்போதே அவர்கள் வேலைக்கு தகுதியுள்ளவர்களாக இருக்கிறார்களா என்பது பற்றி ஆராயவேண்டும்.

தூத்துக்குடியில் உரத் தொழிற்சாலை வரவிருக்கிறது; அதுபோல, தஞ்சையிலும் -- தென் ஆற்காடு மாவட்டத்திலும் உரத் தொழிற்சாலைகள் நமக்கு அவசியம் தேவை.

தமிழ்நாட்டில் சேதுசமுத்திரம் திட்டம் நிறைவேற்றப்பட்டால் சுமார் 10 000 பேர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும்.

தூத்துக்குடித் துறைமுகத் திட்டம் நல்ல துறைமுகமாக உருவானால் வாணிபம் பெருக முடியும்; அதற்குச் சேது சமுத்திரம் திட்டமும் இன்றியமையாத ஒன்றாகும்.

முன்பு சேதுசமுத்திரத் திட்டத்தை ரூ. 25 கோடி செலவில் நிறைவேற்றத் திட்டமிடப்பட்டது; இன்று அதைவிட அதிகம் செலவிட வேண்டியிருக்கும்; இதற்கு ஆயாசப்பட்டால், நாள் ஆக ஆகச் செலவும் அதிகமாகிக் கொண்டே இருக்கும்."

துரோகத்தின் எதிரொலி

பொறுப்பிலிருந்து விலகுகின்றனர்

மதுரை, அக். 21—
மதுரை பொன்மேனி சொக்கலிங்கநகர் அண்ணா அறிவகம் உட்கிளை எம் ஜி.ஆர். மன்றத் தலைவர் திருமதி பி அனுசூயா, செயலாளர் ஆர். மாரிமுத்து, பொருளாளர் பால்ராஜ், துணைச் செயலாளர் எஸ் எஸ். நடராசன், மன்றப் பிரதிநிதி பெ. இராமசாமி ஆகியோர், மன்ற நிர்வாகப் பொறுப்பிலிருந்து விலகிவிட்டதாக அறிவித்திருக்கின்றனர்.

எம். ஜி. ஆர். மன்றங்கள் கலைக்கப்படுகின்றன

—★—

'துரோக'த்துக்குத் துணை நின்றவரின் செயல் கண்டு மக்கள் மனவேதனை

—★—

கழகத் தோழர்களின் கண்ணீர்க் கடிதங்கள்

சென்னை, அக். 21—
"தமிழ்நாடு முழுவதிலும் இதுவரையில் ஆயிரத்திற்கு மேற்பட்ட எம். ஜி. ஆர். மன்றங்கள் கலைக்கப்பட்டிருக்கின்றன"

என்ற தகவல், பல்வேறு ஊர்களிலுமிருந்து தலைமைக் கழகத்திற்கு வந்துகொண்டிருக்கும் கடிதங்கள் மூலம் தெரியவருகிறது.

"தி. மு. கழகத்தை மாற்றுக்குக் காட்டிக் கொடுக்கும் கோணல் செயலில் ஈடுபட்டமைக்காக நீக்கிவைக்கப்பட்ட ஒருவரின் பெயரால் இனியும் மன்றங்களை அமைத்துக்கொண்டு -- அவற்றில் அங்கம் வகித்துக் கொண்டிருப்பது அவமானத்துக்கு உரியது என்பதை உணர்ந்துவிட்டோம்; எங்களால் உருவாக்கப்பட்ட இந்த மன்றங்களை உடனடியாக கலைக்கிறோம்"

என்று அந்தந்த ஊர்களிலிருந்து கடிதம் மூலம் தகவல்களும் தோழர்கள் பலரும் சுட்டிக்காட்டிக் குறிப்பிட்டிருக்கின்றனர்.

இதன் தொடர்பாகத் தலைமைக் கழகம் வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் கூறப்பட்டிருப்பதாவது:—

"எம். ஜி. ஆர். மன்றங்களைக் கலைத்து, அண்ணா மன்றம் -- நடிப்பிசைப் புலவர் மன்றம் -- கலைவாணர் மன்றம் என்றும், கழகத் தலைவர்கள் பெயர்களாலும் மாற்றப்பட்டு வருவதாக 20-ம் நாள் நேற்று ஒருநாள் மட்டும் 600-க்கு மேற்பட்ட எம்.ஜி. ஆர். மன்றக் கலைப்புக் கடிதங்கள் வந்துள்ளன.

"தமிழ்நாடு முழுவதிலும், இதுவரையில் 1,000-க்கு மேற்பட்ட எம். ஜி. ஆர். மன்றங்கள் கலைக்கப்பட்டுவிட்டன.

"கழகத்திடம் தாங்கள் கொண்டுள்ள உண்மையான பற்றைப் பிரதிபலித்துத் தோழர்கள் எழுதிவரும் கடிதங்கள் உணர்ச்சிக் கொந்தளிப்புகளாக உள்ளன.

"ஒவ்வொரு கடிதத்திலும், கட்டுப்பாட்டை மீறிய எம். ஜி. ஆர். மீது தலைமைக் கழகம் எடுத்த நடவடிக்கையைப் பாராட்டிப் பக்கம் பக்கமாக எழுதியிருக்கின்றனர்."

சென்னைக் கடற்கரை சீரணி அரங்கம்

... விளக்கம்

சென்னை அக். 21—
... செய்தி -- மக்கள் ... துணை இயக்குநர் வி. ... கீழ்க்கண்டவாறு அறிக்கை ஒன்று வெளியிட்டிருக்கிறார்:—

"இத்திங்கள் 22-ந் தேதி சென்னைக் கடற்கரை சீரணி அரங்கில் பொதுக்கூட்டம் நடத்த இடம் அளிக்குமாறு கோரி சென்னை மாவட்டக் காங்கிரசின் தென் சென்னைத் தலைவரும் -- புரசைவாக்கம் நண்பர்கள் கழகத்தினரும் இத்திங்கள் 7-ம் நாளன்றே அரசுக்கு விண்ணப்பம் செய்திருந்தனர்.

காங்கிரசுக் கட்சியின் கூட்டத்தில் மத்திய அமைச்சர்கள் கலந்துகொள்வதாகக் குறிப்பிட்டிருந்ததால், அவர்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து ஒதுக்கீடு செய்யப்பட்டது.

அக். 19-ந் தேதியன்று முறைப்படி வாடகைப் பணம் கட்டிய காங்கிரசுக் கட்சிக்குச் சீரணி அரங்க ஒதுக்கீடு உறுதி செய்யப்பட்டது.

அக். 22-ந் தேதி கூட்டம் நடத்தச் சீரணி அரங்கம் வேண்டும் என்று வேறு யாரும் விண்ணப்பம் செய்யவே இல்லை."

கழகத் தலைவர் கலைஞர் விளக்கம் — வேண்டுகோள்

தமிழ்ப் பெருங்குடி மக்களே- நல்ல தீர்ப்பு வழங்குவீர்

'உயிர்ச் சக்தி' உருக்குலைய வேண்டுமா?

ஏழைகளின் இயக்கத்திற்கு இடையூறு விளைவிப்பவர்களின் எண்ணத்தைப் புரிந்துகொள்வீர்

சென்னை, அக். 21—

"தி. மு. கழகம், ச[illegible] இயக்கம் — ஏழைகளின் இயக்கம் — பாட்டாளிக[illegible]கம் — தமிழ் மொழி காக்க இருக்கின்ற ஒரே [illegible] தமிழர் சமுதாயத்திற்காக வாழுகின்ற ஒரே இயக்கம்; அப்படிப்பட்ட இந்த இயக்கத்தை அழித்துவிட்டால், இந்தச் சமுதாயத்தைக் காப்பாற்ற வேறு வழி என்ன இருக்கிறது என்பதை யோசித்துப் பார்க்க வேண்டும்.

"கழகம் அப்படி அழிந்துவிடுகின்ற சாதாரணமான கட்சியல்ல; அதனுடைய உயிர்ச் சக்தி, எங்களோடு மட்டும் முடிந்துவிடவில்லை; கிளைக் கழகத்தினுடைய செயலாளர்களைச் சந்தித்தாக வேண்டும்; இந்தக் கழகக் கோட்டையைக் காப்பாற்ற 18 000 சிப்பாய்கள் இருக்கிறார்கள் என்பதை மறந்துவிடாதீர்கள்!

"திராவிட முன்னேற்றக் கழகம் ஓர் அமைப்பு; இந்த அமைப்பை ஏதோ சாதாரணமாக ஆட்டுவதால்—அசைப்பதால் தூள்தூளாக ஆகிவிடக்கூடிய ஒன்று அல்ல; 'இன்றைக்கு அரசாங்கம் திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய கையிலே இருக்கிறது; ஆகவே கொஞ்சம் சங்கடம்' என்று கூறிவிடுவதற்கும் இல்லை; ஏனெனில், முன்னேற்றக் கழகம் எதிர்க் கட்சியாக இருந்தாலும் கூட அதனை அசைக்கவோ — குலைக்கவோ யாராலும் முடியாது என்பதை மறந்துவிடாதீர்கள்!

"தமிழ்ப் பெருங்குடி மக்களே — கழக ஆட்சியை இழந்துவிட்டு நீங்கள் இங்கே வேறு எந்த ஆட்சியை உருவாக்கப் போகிறீர்கள்? எந்த ஆட்சி உங்களுக்குத் தேவை?"

என்று கழகத் தலைவர் கலைஞர் அவர்கள், சென்னை 36-வது வட்ட தி.மு.க. சார்பில் நடைபெற்ற மாபெரும் பொதுக்கூட்டத்தில் உரையாற்றுகையில் சுட்டிக்காட்டி வினவினார்.

கூட்டத்திற்கு தோழர் பாலசுந்தரம் தலைமைதாங்கினார்; தோழர்கள் எம். குமார், முன்னாள் மேயர்கள் மைனர் மோசஸ், வி. முனுசாமி, வேலூர் கண்ணன், பி. ஆர். இலட்சுமிகாந்தன், திருப்பத்தூர் இராமமூர்த்தி, வழக்கறிஞர் ந. கணபதி எம்.எல்.ஏ., மாவட்டச் செயலாளர் நீலநாராயணன் எம்.எல்.சி., அமைச்சர்கள் ஓ. பி. இராமன், எஸ். ஜே சாதிக் பாட்சா, அன்பில் தர்மலிங்கம், என். வி. நடராசன், மன்னை நாராயணசாமி ஆகியோர் பேசினர்.

இறுதியில் கழகத் தலைவர் கலைஞர் அவர்கள் உரையாற்றுகையில் குறிப்பிட்டதாவது:—

"புரட்சி நடிகர் எம். ஜி. ஆர்., தி. மு. கழகத்தைச் சோதனைக்குள்ளாக்க நினைத்தார்; இன்று அவர் நம்மிடமில்லை; 'இருக்க மாட்டேன்' என்று சொல்லிவிட்டு நம்மிடமிருந்து போய்விட்டார்.

தற்காலிகமாக விலக்கிவைத்து விளக்கம் கேட்டோம்; 'நான் நிரந்தரமாகவே விலகிவிடுகிறேன்' என்று சொல்லிவிட்டு புதிய கட்சி தொடங்கிவிட்டார்; 'கருணாநிதி சர்வாதிகாரி ஆகிவிட்டார் — அதனால் விலகினேன் — புதிய கட்சி தொடங்கிவிட்டேன்' என்று சொல்கிறார்.

'ஏன் இந்தப் பெயரில் கட்சி தொடங்கியிருக்கிறீர்கள் — அண்ணா பெயரை வைத்திருக்கிறீர்கள்' என்று கேட்டால், 'தி. மு. கழகம் கருணாநிதி முன்னேற்றக் கழகமாக ஆகிவிட்டது' என்று சொல்லியிருக்கிறார்.

நான் முதலமைச்சராக இருந்தாலும், அமைச்சரவையிலிருக்கின்ற நாவலரையோ மற்ற அமைச்சர்களையோ கலந்துகொள்ளாமல் எல்லா முடிவுகளையும் எடுக்கிறேனா?

ஒரு முதலமைச்சர், கொள்கையைப் பற்றிய சில முடிவுகளை எடுத்துவிட்டேகூட, சக அமைச்சர்களுக்கு அறிவிப்பது வழக்கம்; என்னைப் பொறுத்தவரையில், எந்த முடிவுகளையும் அமைச்சர்களைக் கலந்துதான் எடுக்கிறேன்.

அதற்கு உதாரணம் சொல்லவேண்டுமென்றால் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன்; மதிப்பிற்குரிய காமராசர், தமிழ்நாட்டு முதலமைச்சராக 13-4-54 லிருந்து 2-10-63 வரையில் இருந்திருக்கிறார்; அவர் நடத்திய அமைச்சரவைக் கூட்டங்கள்— 1954-ல்—9; 1955-ல்—8; 1956-ல்—9; 1957-ல்—6; 1958-ல்—6; 1959-ல்—7; 1960-ல்—6; 1961-ல்—3; 1962-ல்—6; 1963-ல்—3; ஏறத்தாழ ஒன்பது ஆண்டுக் காலம் காமராசர் முதலமைச்சராக இருந்தபோது நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டங்கள் 61.

திரு. பக்தவத்சலம், 2-10-63 முதல் 5-3-67 வரையில் முதலமைச்சராக இருந்திருக்கிறார்; அவர் நடத்திய அமைச்சரவைக் கூட்டங்கள் 1963-ல் 2; 1964-ல் 5; 1965-ல் 4; 1966-ல் 4; ஆக, நான்காண்டுக் காலத்தில் முதலமைச்சர் பக்தவத்சலம் நடத்திய அமைச்சரவைக் கூட்டங்கள் 15.

அண்ணா அவர்கள் முதலமைச்சராக இருந்த காலத்தில் அதிக அளவு அமைச்சரவைக் கூட்டம் நடைபெறாதது ஏன் என்று உங்களுக்குத் தெரியும்; அந்த அளவுக்கு அண்ணா உடல் நலமற்றிருந்தார்.

1969-ல் நான் முதலமைச்சர் பொறுப்பை ஏற்றேன்; அதற்குப் பிறகு நடந்த அமைச்சரவைக் கூட்டங்கள் — 1969-ல் 7; 1970-ல் 17; 1971-ல் 14; 1972-ல் இன்றையத் தேதிவரையில் 8.

ஆக, பக்தவத்சலம் காலத்தில் நடந்த அமைச்சரவைக் கூட்டங்கள் 15; அதே நான்காண்டுக் காலத்தில் இப்போது கூடிய அமைச்சரவைக் கூட்டங்கள் 46; நான் சர்வாதிகாரியா?

"ஆட்சியிலே சர்வாதிகாரியாக இல்லாமல் இருக்கலாம்; கட்சியிலே நீதான் சர்வாதிகா[illegible] எம். ஜி. ஆர். சொல்வாரானால், அதற்கும் [illegible]; 1966—67—1968—1969 ஆகிய நான்காண்டு[illegible] கழகத்தின் பொதுச்செயலாளராக அண்ணா அவர்க[illegible] காலத்தில் நடந்த செயற்குழுக் கூட்டங்கள் 4; [illegible]ர்கள் பொதுச்செயலாளராக இருந்தபோது செயற்குழுக் [illegible]ங்களைக்கூட நாங்கள் எதிர்பார்ப்பதில்லை; ஏனென்றால், அண்ணா சொன்னாலே அதுவே எங்களுக்கு வேதம்!

நான் கழகத்தின் தலைவராகவும், நாவலர் பொதுச் செயலாளராகவும் பொறுப்பேற்ற பிறகு 1969, 1970, 1971, 1972 ஆகிய நான்காண்டுக் காலத்தில் கூட்டப்பட்ட செயற்குழுக் கூட்டங்கள் 14.

நான் சர்வாதிகாரியாம் — எம். ஜி. ஆர். சொல்கிறார் — நியாயம்தானா — எண்ணிப்பார்க்க வேண்டும்.

அதைப்போலவே, 1966, 1967, 1968-ல் அண்ணா காலத்தில் கூட்டப்பட்ட பொதுக்குழுக் கூட்டங்கள் 4; நான் தலைவரான இந்த மூன்றாண்டுக்காலத்தில் 7 பொதுக்குழுக் கூட்டங்கள் நடைபெற்றிருக்கின்றன; யாரை எந்த முக்கியப் பிரச்சினையில் கலந்துகொள்ளாமல் நான் முடிவெடுக்கிறேன்.

அண்ணா அவர்கள் அன்று எங்களையெல்லாம் வழிநடத்திச் சென்ற நேரத்தில், 'செயற்குழுக் கூட்டங்களே கூடத் தேவையில்லை; நீங்கள் கட்டளையிடுங்கள் — நாங்கள் நிறைவேற்றுகிறோம்' என்று நாங்களெல்லாம் ஒருமித்துச் சொன்ன நேரம் அது; ஆகவே, அந்தக் கணக்கையும் — இந்தக் கணக்கையும் ஒப்பிட வேண்டுமென்று சொல்லவில்லை.

நான் பொறுப்பேற்றுக் கொண்ட பிறகு, செயற்குழு — பொதுக்குழுவை சந்திக்காமல் நானாகவே எந்தக் காரியத்தைச் செய்திருக்கிறேன்?

இன்றைக்கும், செயற்குழு — பொதுக்குழுவைக் கூட்ட முடியவில்லையென்றால், நானும் நாவலரும் — மற்ற கழகத் தலைவர்களும் கலந்துகொண்டுதான் முடிவெடுக்கிறோமேயல்லாமல், எந்த முடிவையும் நானாகத் தனியாக எடுப்பதில்லை.

ஆனால், எம். ஜி. ஆர். அல்லவா தனியாக முடிவெடுத்தார்? ஆயிரம்விளக்கில் கூட்டம் போடச் சொல்லி — அந்தக் கூட்டத்தில் அவரே, 'நான் பொதுக்குழுவில் ஒரு தீர்மானம் கொண்டு வருவேன்; அதைப் பொதுக்குழு நிறைவேற்ற வேண்டும்' என்ற அளவில் நிறுத்தியிருந்தால் அது சனநாயகம் ஆனால், அவர், 'கழகத்திலிருக்கிற 18,000 கிளைக் கழகச் செயலாளர்களும் — அமைச்சர்களும் — எம்.எல்.ஏ.-க்களும் — அவர்தம் குடும்பத்தினரும் சொத்துக் கணக்கு காட்டவேண்டும்; இல்லாவிட்டால் பொதுமக்களைச் சந்திப்பேன்' என்று கூறினார் என்றால், என்ன அர்த்தம் அதற்கு? 'நான் கட்சியிலிருந்து விலகிவிடுவேன்' என்பதுதானே அதற்கும் பொருள்?

'பொதுக்குழுவுக்கு அடங்கி நடக்கமாட்டேன் — தீர்மானம் தோற்றால் நான் இருக்கமாட்டேன் — பொதுமக்களுக்கு முன்னால் வருவேன்' என்று சொன்னாரே—முடிவுக்குவந்த பின்னர்தான் அவர் அப்படிக் கூறியிருக்கிறார்?

பின்னர் ஏன், 'விலக்கிவிட்டார்கள் — வெளியேற்றிவிட்டார்கள்' என்று கூறவேண்டும் அப்படி கூறுவதில் ஏதேனும் நியாயமிருக்கிறதா!

கழகத்தில் தவறு செய்தவர்கள்மீது இதுவரை நடவடிக்கை எடுக்கவில்லையா? பரிசுத்த நாடாரை எதிர்த்து நான் தஞ்சையில் போட்டியிட்டபோது எனக்குத் தேர்தல் ஏஜெண்டாக வேலை செய்தார் மாணிக்கவாசகம் என்பவர்; எனக்கு மிகவும் நெருங்கிய நண்பர்; கழக அரசு வந்தவுடன் ஒரு கூட்டுறவு வங்கியில் அவர் பொறுப்பு ஏற்றார்; 'தவறு செய்தார்' என்றவுடனே சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்பட்டது; போலீசாரால் கைது செய்யப்பட்டார்; என்னுடைய நண்பர் என்பதற்காக அவரை விட்டுவிடவில்லை.

'எல்லோரும் கணக்குக் காட்டவேண்டும்' என்றால், அது முடிகிற காரியமா? அந்தக் கணக்குகளை எல்லாம் யார் பார்ப்பது? அவர்கள் தருகின்ற கணக்குகள் அனைத்தும் உண்மையா என்பதை அவரவர்களுடைய ஊருக்குப்போய் யார் பார்ப்பது? நாங்கள் என்ன பள்ளிக்கூடத்துப் பிள்ளைகளா? எம். ஜி. ஆர். எங்களுக்குச் சட்டாம்பிள்ளையா?

தி. மு. கழகம் இதுவரையில் யார் யாரால் ஆதரிக்கப்பட்டதோ அவர்களாலேயே ஆதரிக்கப்பட்டுவருகிறது; ஆனால் புரட்சி நடிகர் எம்.ஜி.ஆர்., யார் யாரால் எதிர்க்கப்பட்டாரோ அவர்களால் ஆதரிக்கப்படுகிறார்; இந்த உண்மையைப் புரிந்துகொண்டால், அதுபற்றி நான் அதிகம் சொல்லத் தேவையில்லை.

ஆயிரக்கணக்கான — இலட்சக்கணக்கான தோழர்கள் கண்ணீரும் செந்நீரும் கொட்டி வளர்த்த கழகம் இது; அதைக் காப்பாற்ற வேண்டிய கடமை எனக்கு இருக்கிறது.

தியாகத் திருவுருவங்கள் உள்ள கழகத்திற்கு ஒரு களங்கம் — ஊனம் வருகிற நேரத்தில், நானோ — நாவலரோ — கழகத்தைக் கட்டிக் காக்கின்ற செயற்குழு பொதுக்குழு உறுப்பினர்களோ— மாவட்ட வட்ட கிளைக் கழகச் செயலாளர்களோ எப்படிப் பொறுத்துக்கொண்டு இருக்கமுடியும்?"

வெள்ளை சர்க்கரையால் விபரீதங்கள்தான்

மக்கள் நினைப்பதைவிடக் கெடுதலானது

புதுடில்லி, அக். 17—

சர்க்கரை ஒருவனுக்குக் கொழுப்புச் சத்தை அளிக்கும்; அவனுக்குச் சர்க்கரை வியாதி — கீல் வாதம் — வயிற்றுநோய்—இருதய நோய் — தோல், பல் தொந்தரவுகள் ஆகியவைகளை நிரந்தரமாக அளிக்கும் என்று சமீபத்தில் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது; ஆனால், பழுப்புச் சர்க்கரையிலும் வெல்லத்திலும் அவ்வளவு கெடுதல்கள் இல்லை.

வெள்ளைச் சர்க்கரை நிறைய உள்ள உணவைத் தொடர்ந்து 2 வாரங்கள் உட்கொண்டால் இளைஞர்களுக்குத் தொலைப் பார்வைக் கோளாறுக்கான அறிகுறியும், எலிகளுக்கு அண்மைப் பார்வைக் கோளாறுக்கான அறிகுறியும் தோன்றும்.

சர்க்கரை விலை உயர்வால் அவதிப்பட்டுக் கொண்டிருக்கும் மக்களுக்கு ஓர் ஆறுதலாகப் பிரிட்டிஷ் சத்துணவு ஆராய்ச்சி நிபுணர்களின் ஒரு முடிவு வெளிவந்திருக்கிறது.

"சர்க்கரையைக் குறைத்துச் சாப்பிடுவதால் யாருக்கும் எந்தவிதமான நட்டமும் இல்லை; ஆனால், நன்மை அனுகூலம் நிறைய இருக்கிறது" என்பது அவர்கள் முடிவாகும்.

சர்க்கரை சாப்பிடுவதானது, சாதாரணமாக மக்கள் நினைப்பதைவிடக் கெடுதலானது; அந்தப் பழக்கத்தை மட்டும் மனிதன் விட்டுவிட்டால் அவன் எவ்வளவோ நன்றாக இருப்பான்.

வெள்ளைச் சர்க்கரை போட்டால் பானங்களும் — உணவும் அதிக ருசியாக இருக்கின்றன; மற்றபடி அதனால் என்ன பயன்? ஒரு சத்தும் இல்லாத 'வெப்பச் சக்தி தரும் காலரி'களுக்கு ஓர் உருவம் வேண்டுமென்றால் அது வெள்ளைச் சர்க்கரைதான்!

நோட்டுக்களை அச்சடித்துக் குவிக்கிறது மத்திய அரசு

பொருளாதார நிபுணர்கள் கருத்து ஏற்கப்படவில்லை?

புதுடில்லி, அக். 14—

4-வது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் (ஐந்தாண்டுகட்கு) மொத்தம் ரூ. 850 கோடிக்கு நோட்டுகள் (காகிதப் பணம்) அச்சிட மத்திய அரசு முன்பு திட்டமிட்டிருந்தது; ஆனால், நான்கு ஆண்டுக் காலத்துக்குள்ளாகவே ரூ 1,379 கோடிக்கு நோட்டுகளை அச்சடித்துக் குவித்துவிட்டது!

1971-ம் ஆண்டு மட்டும் ரூ. 710 கோடி அளவில் நோட்டுகள் அச்சாகியிருக்கிறது.

ஒவ்வோர் ஆண்டும் எவ்வளவு ரூபாய்க்கு நோட்டுகள் அச்சடிக்கப்பட்டிருக்கின்றன என்ற விவரம் வருமாறு:—

1969: ரூ 58 கோடி
1970: ரூ 359 கோடி
1971: ரூ. 710 கோடி

1972-ம் ஆண்டு ரூ 252 கோடிக்கு அச்சிட முடிவாகியிருக்கிறது.

4-வது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் — அதாவது 5 ஆண்டுகளுக்கு மொத்தம் ரூ 2,100 கோடிக்கு வரி விதிக்க மத்திய அரசு முன்பு திட்டமிட்டிருந்தது; ஆனால், இப்போதே (4 ஆண்டுகளில்) ரூ 2,900 கோடிக்கு வரி விதித்து விட்டது; வங்காள நிவாரண நிதிக்காக விதிக்கப்பட்ட வரி இந்தக் கணக்கில் சேர்க்கப்படவில்லை.

"அளவுக்கு அதிகமாக ரூபாய் நோட்டுகள் அச்சடிப்பதுதான் விலைவாசி உயர்வுக்கு முக்கியக் காரணம்" என்று, பொருளாதார நிபுணர்கள் கருத்துத் தெரிவித்திருப்பது குறிப்பிடத்தக்கது.

வங்காள தேசத்திற்கு 'யுனெஸ்கோ'வில் இடம்

பாரிஸ், ஜூன் 20—

ஐ. நா. நிறுவனங்களில் ஒன்றான 'யுனெஸ்கோ'வில் வங்காள தேசம் உறுப்பினர் நாடாகச் சேர்த்துக் சேர்த்துக்கொள்ளப்பட்டது.

இதற்கு ஆதரவாக 84 வாக்குகளும்—எதிராக 22 வாக்குகளும் பதிவாயின; 6 நாடுகள் வாக்கெடுப்பில் கலந்துகொள்ளவில்லை.

தொழிலாளர் நலத்துறை அமைச்சர்

என். வி. நடராசன்

நிகழ்ச்சிகள்

அக். 22 பிற்பகல் 1 மணி: நெய்வேலி; இரவு 7 மணி: கடலூர்.

போக்குவரத்துத்துறை அமைச்சர்

ச. இராமச்சந்திரன்

நிகழ்ச்சிகள்

அக். 22 காலை 10 மணி: சேலம் தமிழ்நாடு போக்குவரத்துபற்றி ஆய்வு; இரவு 7 மணி: சேலம் பொதுக்கூட்டத்தில் கலந்துகொள்ளல்.

திறந்தவெளிச் சிறைச்சாலைகள்

தமிழ்நாட்டில் ஏற்படுத்தத் திட்டம்

சட்ட அமைச்சர் செ. மாதவன் தகவல்

சென்னை, அக். 21—

"கைதிகளைப் பழிவாங்கும் உணர்ச்சி — அவர்கள் கடுமையாக நடத்தப்பட வேண்டும் என்ற எண்ணம் அரசுக்குச் சிறிதுகூட இல்லை; ஏதாவது ஒரு போராட்டத்தின்போது திடீரென்று அதிக எண்ணிக்கையில் சிறையில் கைதிகள் வந்துவிடும் காரணத்தால், சில நேரங்களில் சிறைகளில் சில குறைபாடுகள் ஏற்பட்டுவிடுகின்றன.

"தமிழ்நாட்டிலுள்ள ஒவ்வொரு மத்திய சிறைகளுக்கு அருகில் — சுமார் 20 அல்லது 30 மைல்களுக்கு அப்பால் திறந்தவெளிச் சிறைச்சாலைகள் அமைக்கத் திட்டமிடப்பட்டிருக்கிறது; இதன் மூலம் நெருக்கடிச் சந்தர்ப்பங்களில் ஏற்படுகின்ற குறைபாடுகளை நீக்கிவிடலாம்; ஆகவே, இன்னும் ஓராண்டுக் காலத்திற்குள் ஒவ்வொரு மாவட்டத்திலும் மத்திய சிறைச்சாலைக்கு 20 மைலுக்கு அப்பால் அரசுக்குச் சொந்தமான சுமார் 200 அல்லது 300 ஏக்கர் நிலப்பரப்பை கையகம் செய்து திறந்த வெளிச் சிறைச்சாலை ஏற்படுத்த ஆவன செய்யப்படும்; மாவட்டக் கலெக்டர்கள் இதுபற்றி ஏற்கனவே கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார்கள்"

என்று சட்டத் துறை அமைச்சர் திரு. செ. மாதவன் அவர்கள், தமிழகச் சிறைச்சாலைகளின் கண்காணிப்பாளர்கள் — நன்னடத்தை அலுவலர்களின் இரண்டு நாள் மாநாட்டைத் துவக்கிவைத்துப் பேசுகையில் தெரிவித்தார்; அவர் மேலும் குறிப்பிட்டதாவது:—

சிறந்த ஒழுக்கத்திற்குத் தூண்டுகோல்கள்

"சிறையில் உள்ள கைதிகளுக்கு சிறந்த ஒழுக்கத்தை அளிக்கக் கூடிய கருத்துக்கள் பரப்பப்பட வேண்டும்.

திருக்குறள் — திருவருட்பா போன்ற அறநூல்களில் பயிற்சி பெற்ற தமிழ் ஆசிரியர்களையும்— புலவர்களையும் நியமித்து ஒழுக்கத்திற்கேற்ற நல்ல கருத்துக்களை கைதிகளுக்குக் கற்பித்தால் பெரும் அளவிற்கு நன்மை ஏற்படும்.

கைதிகளுக்கு சலுகைகள்

"கைதிகள் தங்கள் உறவினர்களைப் பார்ப்பது — புகைபிடிப்பது முதலியன பற்றி இப்பொழுது உள்ள விதிமுறைகளில் பழைய நடைமுறைகளை அப்படியே பின்பற்றாமல் காலத்திற்கேற்றவாறு மாற்றங்கள் — சலுகைகள் அளிக்கப்படவேண்டும்."

சிரமங்களைச் சமாளிக்கும் இரு துறைகள்

சிறைத் துறைத் தலைவர் பி. குப்புசாமி அனைவரையும் வரவேற்றுப் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"அரசாங்கத்தில் இரண்டு துறைகள். மிகவும் சிரமங்களுக்கிடையே பணியாற்ற வேண்டியிருக்கிறது; ஒன்று — போலீசுத் துறை; மற்றொன்று சிறைத்துறையாகும்.

"சிறை கண்காணிப்பாளர்களின் தகுதியையும் ஊதியத்தையும் உயர்த்தித் தரவேண்டும்; சிறைத் துறைப் பணியாளர்கள் அனைவருக்கும் வீட்டு வசதிசெய்து தரப்பட வேண்டும்."

சிறைச்சாலைச் சட்ட விதிகளில் மாற்றங்கள் செய்வது—சிறையில் உணவு, உடை, சிறைத்துறை நிர்வாகம் சம்பந்தப்பட்ட பல பிரச்சினைகளைப் பற்றி இரண்டாம் நாள் மாநாட்டில் விவாதிக்கப்பட்டு முடிவுகள் எடுக்கப்பட்டன; அவைகள் அரசாங்கத்தின் பரிசீலனைக்கு அனுப்பப்படுகின்றன.

நவீன அரிசி ஆலைகள் உணவுக் கார்ப்பரேஷன் எடுத்துக்கொள்ளும்

அமைச்சர் அறிவிப்பு

"தமிழ்நாட்டிலுள்ள எல்லா நவீன அரிசி ஆலைகளையும் மாநில சிவில் சப்ளை கார்ப்பரேஷன், கூட்டுறவுத் துறையின் கீழ் எடுத்துக்கொள்ளும்"

என்று உணவு அமைச்சர் மன்னை ப. நாராயணசாமி, நிருபர்களிடம் தெரிவித்தார்; அவர் மேலும் கூறியதாவது:—

தஞ்சை மாவட்டத்தில் ஐந்து நவீன அரிசி ஆலைகள் இருக்கின்றன; மற்ற மாவட்டங்களில் மொத்தம் ஏழு ஆலைகள் இருக்கின்றன; இந்த ஆலைகளில் கார்ப்பரேஷன் தன்னிடமுள்ள நெல்லை அறைக்கும்; இந்த ஆலைகள் வேலை செய்யாமல் இருக்காது என்றும் அவர் சொன்னார்.

இந்த ஆலைகளில் பணியாற்றும் ஊழியர்கள் — கார்ப்பரேஷன் வேலைக்கு எடுத்துக்கொள்ளும்.

தஞ்சாவூரில் ரூ. 17 இலட்சம் அல்லது ரூ. 18 இலட்சம் செலவில் அமைக்கப்பட்ட சில அரிசி ஆலைகள் நீண்ட நாட்களாக வேலை செய்யாமலிருக்கின்றன; இந்த ஆலைகள் அந்தந்ததாலுகா மார்க்கெட்டிங் சங்கங்களினால் ஏற்படுத்தப்பட்டவையாகும்."

உற்பத்தித் திறனுடன் இயைந்த கல்வி முறை

அ. இ. கல்விக் கருத்தரங்கு பரிந்துரை

சேவாகிராமம், அக். 18—

"நாட்டின் பொருளாதார வளர்ச்சியைப் பெருக்கக்கூடிய வகையில், உற்பத்தித் திறனுடன் இயைந்த கல்வி முறையை ஏற்படுத்த வேண்டும்"

என்று தேசியக் கல்வி பற்றிய அனைத்திந்தியக் கருத்தரங்கு பரிந்துரைத்துள்ளது.

இக்கருத்தரங்கின் பரிந்துரை வருமாறு:—

துவக்கக் கல்வி முதற்கொண்டு பல்கலைக் கழகப் படிப்பு வரையில், மூன்று முக்கிய நோக்கங்களின் அடிப்படையில் கல்வி முறை அமைய வேண்டும்; இதன்படி, முதலாவதாக தன்னம்பிக்கை — தற்சார்பு நிலை — உழைப்பின் மதிப்பு ஆகியவற்றை மாணவர்கள் உணரக் கூடிய வகையில் கல்வி முறை இருத்தல் வேண்டும்.

இரண்டாவதாகச் சமூக சேவைத் திட்டங்களில் ஆசிரியர்களையும்— மாணவர்களையும் ஈடுபடுத்துவதன் மூலம் அவர்களிடையே தேசிய உணர்வையும் — சமூகப் பொறுப்புணர்ச்சியையும் ஏற்படுத்த வேண்டும்.

மூன்றாவதாக அனைத்து மதச் சமரசத்தையும் — நீதி நெறிகளையும் — ஒழுக்கக் கட்டுப்பாடுகளையும் மாணவர்கள் உணரச் செய்ய வேண்டும்.

கல்வியின் தரம் சிறிதும் குன்றாத வகையில், அதனைப் பரப்புவதற்கு எல்லா மாநில அரசுகளும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

பொருளாதாரம் — அரசியல் — சமூக இயல் — தத்துவம் முதலிய பாடங்களைப் போதிக்கும் போது இவற்றில் காந்தியின் கருத்து என்ன என்பதையும் கற்பிக்க வேண்டும்.

பள்ளிப் படிப்பு 10 ஆண்டுகளாகவும் அதையடுத்து கல்லூரியில் பட்டப் படிப்பு 3 ஆண்டுகளாகவும் இருக்க வேண்டும்.

இதற்கிடையில், பள்ளிப் படிப்பு முடித்தவர்கள் தொழில் நுட்பப் பயிற்சி பெறுவதற்கு வாய்ப்பாக 2 ஆண்டு டிப்ளமா வகுப்புக்கள் பல துவக்கப்படலாம்.

டிப்ளமா முடித்தவர்கள் பின்னர் எந்த நேரத்திலும் கல்லூரியில் சேர்ந்து பட்டப் படிப்புப் படிக்க வாய்ப்பு அளிக்க வேண்டும்.

அரசாங்கத்தின் பல்வேறு துறைகளும் — தங்களது தேவைகட்கு ஏற்ப — பல்வேறு டிப்ளமா வகுப்புக்களை நடத்தலாம்; பள்ளிப் படிப்பு முடிந்த மாணவர்கள் இதில் சேர்ந்து பயன் பெற முடியும்.

எவ்விதப் பாகுபாடுமின்றி எல்லாக் குழந்தைகட்கும் துவக்க — உயர்நிலைக் கல்வி கிடைக்க வகை செய்ய வேண்டும்; கல்வித் துறையில் தேவையற்ற விதத்தில் அரசு தலையிடுவதைத் தவிர்க்க வேண்டும்.

தனியார் கல்வி நிறுவனங்களில் ஊழல்கள் நடைபெறுவதைத் தவிர்க்க வேண்டும்.

தனியார் கல்வி நிறுவனங்களில் ஊழல்கள் நடைபெறுவதைத் தடுப்பதற்கு, அரசு தீவிர நடவடிக்கை வேண்டுமென்பது உண்மைதான்; ஆனால் அதற்காக அந்த உயர்நிலைப் பள்ளிகளை நடத்துவதற்கான முழுப் பொறுப்புக்களையும் ஏற்பதற்கு, எவ்வித நிர்ப்பந்தத்திற்கும் அரசாங்கம் உடன்படக் கூடாது.

கராச்சி — லாகூரில் விமான எதிர்ப்புப் பீரங்கிகள்

சுரங்கக் கண்ணிகளும் வைக்கப்படுகின்றன

இராவல்பிண்டி, அக். 17—

"பாகிஸ்தானில் கராச்சி, லாகூர் நகரங்களில் — முன்பு கைவிடப்பட்டிருந்த பகுதிகளில் — விமான எதிர்ப்புப் பீரங்கிகள் மீண்டும் தோன்றியுள்ளன.

"பஞ்சாபில் — பாகிஸ்தான் தரப்பு எல்லையில் அதிக அளவில் சுரங்கக் கண்ணிகள் வைக்கப்பட்டிருக்கின்றன"

என்று பாகிஸ்தானிய வட்டாரங்களும் — வெளிநாட்டு அரசியல் வட்டாரங்களும் தெரிவிக்கின்றன.

"விமான எதிர்ப்புப் பீரங்கிகள் — சுரங்கக் கண்ணிகள் பற்றி தகவல் எதுவும் இல்லை; இரண்டு வாரங்களுக்கு முன்பு — காஷ்மீர் போர் நிறுத்தக் கோட்டுக்குக் குறுக்கே 'கோட்லி' என்ற இடத்திற்கு அருகில் இந்தியப் படையினரும் — பாகிஸ்தானிய படையினரும் ஒருவருக்கொருவர் சுட்டுக் கொண்டதை அடுத்து பாகிஸ்தான் இராணுவம் எச்சரிக்கை செய்யப்பட்டிருக்கிறது; அது சம்பந்தமாக ஏதாவது நடவடிக்கைகள் இருக்கலாம்" என்று பாகிஸ்தான் அரசாங்க அதிகாரி ஒருவர் கூறினார்.

பாகிஸ்தான் இராணுவம் கருத்து எதுவும் கூறவில்லை.

"லாகூரிலும், கராச்சியிலும் விமான எதிர்ப்புப் பீரங்கிகள் காணப்பட்டன" என்று அரசியல் வட்டாரங்கள் கூறின.

"சியால்கோட்டிற்குக் கிழக்கே 'ஷகர்கர்' பகுதியில், வயல்களில் மேலும் சுரங்கக் கண்ணிகள் வைக்கப்பட்டிருக்கின்றன; இவ்வாறு 5 கிலோ மீட்டர் முதல் 12 கிலோ மீட்டர் நீளம் வரையில் சுரங்கக் கண்ணிகள் வைக்கப்பட்டுள்ளன" என்று பாகிஸ்தான் வட்டாரங்கள் கூறின.

சென்ற டிசம்பர் மாதப் போருக்குப் பிறகு அந்தப் பகுதி கைப்பற்றப்பட்ட பகுதியாக இருந்து வருகிறது.

ஆசிய நாடுகளுக்கு அறைகூவல்

சமாளிக்க ஐ. நா. பேரவை பாடுபட வேண்டும்

குடியரசுத் தலைவர் வி. வி. கிரி வலியுறுத்தல்

புதுடில்லி, அக். 17—

"பசி — பட்டினி — சத்துணவுக் குறைவு — வேலையில்லாத் திண்டாட்டம் ஆகிய பிரச்சினைகள், பல ஆசிய நாடுகளுக்கு அறைகூவலாக இருந்துவருகின்றன; இவற்றை ஒழிப்பதற்கு ஐ. நா. பேரவையின் அமைப்புகளும், உலக நாடுகளும் ஒருங்கிணைந்து பெரும் அளவில் பாடுபட வேண்டும் — உழைக்க வேண்டும்"

என்று இந்தியக் குடியரசுத் தலைவர் திரு. வி. வி. கிரி அவர்கள் மாநாடு ஒன்றில் சுட்டிக்காட்டி வலியுறுத்தினார்.

ஐக்கிய நாடுகள் சபையின் கிளைச் சங்கமான உலக உணவு—வேளாண்மை நிறுவனத்தின் (ஆசிய தூரக் கிழக்கு நாடுகளுக்கான) 11-வது வட்டார மாநாடு டில்லியில் நடைபெறுகிறது. இந்த மாநாட்டை குடியரசுத் தலைவர் வி. வி. கிரி துவக்கிவைத்துப் பேசினார்.

இந்த மாநாட்டின் தலைவராக மத்திய உணவு வேளாண்மை அமைச்சர் பக்ருதீன் அலி அகமது தேர்ந்தெடுக்கப்பட்டார்.

இந்த மாநாடு 11 நாட்கள் நடைபெறுகிறது; இந்தியா — அமெரிக்கா — பிரிட்டன் — ஆஸ்திரேலியா — ஜப்பான் உட்பட 21 நாடுகளைச் சேர்ந்த பிரதிநிதிகள் இந்த மாநாட்டில் கலந்து கொள்கின்றனர்.

உணவு வேளாண்மை நிறுவனத்தின் பொது இயக்குநர் டாக்டர் ஏ. எச். போயர்மவும் இந்த மாநாட்டில் கலந்துகொள்கிறார்.

பாகிஸ்தான் இதில் பங்கேற்பதாக இருந்தது; ஆனால் பிரதிநிதி யாரையும் அது அனுப்பவில்லை.

இந்த மாநாட்டைத் துவக்கி வைத்து குடியரசுத் தலைவர் கூறியதாவது:—

"நிலவிலே நடப்பது போன்ற சாதனைகளை மனிதன் சாதித்திருப்பது உண்மைதான்; ஆனால் அதே சமயத்தில் கணக்கற்ற மக்கள், பிறப்பிலிருந்து இறப்பு வரையில் பசி— பட்டினி ஆகியவற்றில் உழன்று தவிக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலைமையும் நீடித்து வருகிறது.

உலக மக்களின் வாழ்க்கை நிலைகளில் ஏற்றத்தாழ்வுகள் அதிகரித்துவருவதுபற்றிக் குறிப்பிட்ட ஒருசிலர் கவலைப்படாமல் இருக்கலாம்; ஆனால், ஆசியா — தூரக்கிழக்கு நாடுகளில் வசிக்கும் நாங்கள், இந்த நிலைமையைக் கண்கூடாகப் பார்க்கிறோம் — அன்றாடம் அனுபவிக்கிறோம்!

உலகின் ஏனைய பகுதிகளில் வாழும் மக்கள் செழிப்பான வாழ்க்கை நடத்துவதை இங்கு உள்ளோர் அறிகின்றனர்; இதேபோன்ற வசதிகளை எதிர்பார்த்து இங்குள்ளோரின் ஆசைகள் பெருகி வருகின்றன; ஆனால் இதற்கான வாய்ப்புகள் இல்லாததால் அதிருப்தியும் — வெறுப்பும் அதன் விளைவாக ஆத்திரமும் அதிகரிக்கிறது: இதை உலக நாடுகள் உணர வேண்டும்.

ஆசிய நாடுகளின் பொருளாதாரம் வேளாண்மையையே அடிப்படையாகக் கொண்டது. வேளாண்மைத் தொழிலுக்கு ஏற்படும இடர்ப்பாடுகளும், தொல்லைகளும் இந்த நாடுகளின் பொருளாதாரத்தையும் பாதிக்கின்றன.

இந்தியாவைப் பொறுத்த வரையில், விவசாயத்துறையில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் அடைந்திருந்தாலும், வேலையின்மைப் பிரச்சினை இந்நாட்டை மிகவும் வாட்டி வருகிறது; ஒவ்வொரு ஆண்டும் 40 இலட்சம் இளைஞர்களும் — பெண்களும் வேலை தேடி அலையும் நிலை நீடிக்கிறது!"

இந்த மாநாட்டில், மத்திய வேளாண்மை அமைச்சர் பக்ருதீன் அலி அகமது வரவேற்புரை ஆற்றினார்; அவர் கூறியதாவது:—

"எந்த இலட்சியங்களை அடைவதற்காக உணவு —வேளாண்மை நிறுவனம் நிறுவப்பட்டதோ அதே இலட்சியங்களை அடைவதற்காக இந்தியாவும் தீவிரப் பணியாற்றி வருகிறது.

வறுமை — பசி — சத்துணவுக் குறைவு — வேலையின்மைப் பிரச்சினை ஆகியவற்றைக் ஒழிப்பதற்கு இந்தியா போராடி வருகிறது.

துவக்கத்தில் பல குறைபாடுகள் காரணமாக இப்பணிக்கு இடர்ப்பாடுகள் ஏற்பட்டன; எனினும், இந்தச் சிக்கல்கள் தீர்ந்து — இப்போது பொருளாதார வளர்ச்சியை அடைவதற்கான சூழ்நிலைகளை ஏற்படுத்துவதில் வெற்றி கிட்டியுள்ளது.

கடந்த 25 ஆண்டுக் காலச் சுதந்தர வாழ்வில் இந்திய வேளாண்மை உற்பத்தி 80 சதவிகிதமாக உயர்ந்துள்ளது; உணவுத் தானிய இறக்குமதி 1966-ம் ஆண்டில் 104 இலட்சம் டன்களாக அதிகரித்தது உண்மைதான்; ஆனால், இப்போது உணவுத் தானிய இறக்குமதி அறவே நிறுத்தப்பட்டுவிட்டது.

இந்த 25 ஆண்டுக் காலத்தில் இந்தியாவின் தொழில் உற்பத்தி மும்மடங்காக அதிகரித்துள்ளது; தேசிய வருமானம் இருமடங்காகி இருக்கிறது.

ஆனால் இந்த வளர்ச்சியின் காரணமாக இந்தியா தனது முயற்சிகளையும்—உழைப்பையும் தளர்த்திக் கொள்ளவேண்டும் என்பதில்லை.

பெருகிவரும் மக்கள் தொகை — நிலையற்ற பருவ நிலைகளினால் வேளாண்மை உற்பத்தியில் ஏற்படும் திடீர் மாற்றங்கள் ஆகியவற்றைக் கருதுகையில், இந்தியா தனது முயற்சிகளையும், உழைப்பையும் முன்னிலும் அதிகமாக அதிகரிக்க வேண்டியிருக்கிறது."

சென்னை — திருப்பதி விமானப் போக்குவரத்து

நவம்பரில் துவங்கும்

ஐதராபாத், அக். 18—

ஐதராபாத் — சென்னை — பெங்களூர் ஆகிய மூன்று நகரங்களிலிருந்தும் நவம்பர் 7-ம் நாள் முதல் திருப்பதிக்கு விமானப் போக்குவரத்து தொடங்குகிறது.

மத்திய அமைச்சர் டாக்டர் கரண் சிங், இந்தப் போக்குவரத்தை அன்று தொடங்கி வைப்பார்.

'வன்முறையாளர் திட்டமிட்டே செயல்படுகின்றனர்'

தலைமைப் போலீசு அதிகாரி அறிவிப்பு

சட்டம்--ஒழுங்கைச் சீர்குலைக்க கையாளும் முறைகள் பற்றி விளக்கம்

சென்னை, அக். 21—

"தமிழ்நாட்டில் பல்வேறு பகுதிகளில் நடைபெறும் சம்பவங்கள் -- அதுபற்றிப் பத்திரிகைகளில் வெளிவரும் செய்திகள் ஆகியவற்றைப் பார்க்கும்போது, வன்முறைகளில் ஈடுபட்டவர்கள் கீழ்க்கண்ட முறைகளைக் கையாண்டு சட்டம் -- ஒழுங்கைக் குலைப்பதற்கு முயற்சித்திருக்கின்றனர் என்பது தெரிய வருகிறது"

என்று செய்தியாளர்களிடம் தமிழ்நாடு தலைமைப் போலீசு அதிகாரி (ஐ. ஜி.) எப். வி. அருள் தெரிவித்து, அவர்கள் கையாளும் முறைகள் என்ன என்பது பற்றிக் குறிப்பிட்டதாவது:—

1. பஸ்கள்மீது கற்களை வீசுவது;
2. பஸ்களைத் தீயிட்டுக் கொளுத்துவது;
3. பத்திரிகைக் கட்டுகளையும் -- கொடும்பாவிகளையும் பொது இடங்களில் கொளுத்துவது;
4. அரசியல் தலைவர்களின் படங்களைப் பொது இடங்களில் உடைப்பது;
5. இரயில்களை நிறுத்தி அவைகள்மீது கற்களை வீசுவது;
6. சாலைகளில் செல்லும் வண்டிகளை நிறுத்திக் கீழ்த்தரமான வார்த்தைகளை எழுதுவது அல்லது அவ்வாறு எழுதப்பட்ட காகிதங்களை ஒட்டுவது போன்ற செயல்களில் ஈடுபட்டுப் போக்குவரத்துக்களைச் சீர்குலைப்பது;
7. போலீசார்மீது கல் வீசித் தாக்குதல்;
8. சட்ட விதி முறைப்படி முன் அனுமதி பெறாமல் ஊர்வலங்கள் நடத்துவது;
9. கொடிக் கம்பங்களை வெட்டிப் பொது இடங்களில் கொடிகளுக்குத் தீயிட்டுக் கொளுத்துவது போன்றவைகளாகும்.

இப்படிப்பட்ட செயல்களினால் ஏற்படும் நிலைமையைப் போலீசார் உறுதியாகவும் -- திறமையாகவும் சமாளித்து வருகின்றனர்.

இதுபோன்ற நெருக்கடியான நேரங்களில், போலீசார் தங்களின் முக்கியக் கடமையை நிறைவேற்றி -- தங்களை எதிர்நோக்கியுள்ள கடுமையான சோதனையைப் பாராட்டத்தக்க விதத்தில் சமாளித்து -- பொது அமைதியைக் காக்கவும் -- நிலைநாட்டவும் பாடுபட்டு வருவதைப் பொதுமக்கள் அறிவார்கள்."

பின்னணியில் யார்?-- புலன்விசாரணை நடைபெறுகிறது

செய்தியாளர்:—"கல்லெறிதல்—தீ வைப்புப் போன்ற செயல்கள் திட்டமிட்டு நடத்தப்படுவதாகக் கருதுகிறீர்களா? யாரேனும் பின்னணியில் இருந்து தூண்டிவிட்டுத் திட்டமிட்டு இந்த வன்செயல்கள் நடைபெறுகின்றனவா?"

எப். வி. அருள்:—"இந்தக் குறிப்பிட்ட பிரச்சினை புலன விசாரணையில் இருக்கிறது; இதுபற்றி விசாரித்துக்கொண்டிருக்கிறோம்; எனவே இப்போது திட்டவட்டமாகச் சொல்ல முடியாது."

புகார்கள் மறுப்பு

போலீசு இன்ஸ்பெக்டர் -- ஜெனரல் எம். வி. அருள் மேலும் கூறியதாவது:—

"போலீசார் மீது மூன்று குற்றச்சாட்டுகள் கூறப்படுகின்றன;-- யாருடைய தூண்டுதலின் பேரிலோ தங்களுடைய ஆதரவாளர்களைப் போலீசார் அநாவசியமாகக் கைது செய்து பொய் வழக்குப் போடுகிறார்கள்; -- வெளி மாவட்டங்களிலிருந்து அடியாட்கள் சென்னைக்கு இறக்குமதி செய்யப்பட்டு ஒரு சாராருடைய ஆதரவாளர்களைத் தாக்குகின்றனர்;--தங்களுடைய கூட்டங்கள்--ஊர்வலங்களுக்குப் போலீசார், வேண்டுமென்றே அனுமதி மறுக்கின்றனர்.

இந்த மூன்று குற்றச்சாட்டுக்களும் உண்மையல்ல; முதலாவது குற்றச்சாட்டைப் பொறுத்தவரையில், இதுவரை எவரிடமிருந்தும் எழுத்து மூலமாகவோ அல்லது வாய்மூலமாகவோ எவ்வித புகாரும் வரவில்லை.

வெளிமாவட்டங்களிலிருந்து அடியாட்களும்--கூலிப் படையினரும் இறக்குமதி செய்யப்பட்டு வன்முறைச் செயல்களில் ஈடுபடுத்தப்படுவதாக போலீசுத் துறைக்குத் தகவல் ஏதும் இல்லை -- இதுவரையில் புகாரும் வரவில்லை.

ஒரு குறிப்பிட்ட சார்பினர் நடத்தும் கூட்டத்திற்கு அல்லது ஊர்வலத்திற்கு அனுமதி வழங்கக்கூடாது என்ற உத்தரவு எதுவும் எந்தப் போலீசு அதிகாரிக்கும் பிறப்பிக்கப்படவில்லை; இந்த குற்றச்சாட்டும் பொய்யானது.

தமிழ்நாட்டில் பல நகரங்களிலும் போலீசுத் தடையுத்தரவு நடைமுறையில் இருக்கிறது; கூட்டங்கள் -- ஊர்வலங்கள் நடத்துவதை ஒழுங்குமுறைப்படுத்துவதற்கே இந்தத் தடையுத்தரவு ஆகும்.

அப்படி ஊர்வலம் அல்லது பொதுக்கூட்டம் நடத்த விரும்புகின்றவர்கள் முன்கூட்டியே எழுத்தமூலம் போலீசாருக்கு விண்ணப்பித்துக் கொண்டால், வரிசைக்கிரமமாக அனுமதி வழங்கப்படுகிறது; எனவே, எந்தக் குறிப்பிட்ட ஒரு பிரிவினரும் தங்களது கருத்தைப் பிரசாரம் செய்ய அனுமதி வழங்கப்படவில்லை என்று கூறப்படுவது சரியானதல்ல; அப்படி மறுத்ததாகவும் இதுவரையில் எந்தப் புகாரும் வரவில்லை."

"இதுபோன்ற புகார் ஏதேனும் எம்.ஜி. ஆரிடமிருந்து வந்ததா?"

"அப்படி ஏதும் இல்லை" என்று கூறிய எப். வி. அருள், மேலும் குறிப்பிட்டதாவது:—

"கடந்த 10-ந் தேதியிலிருந்து இன்றுவரை 2,377 பேர் தடை உத்தரவை மீறியது உள்ளிட்ட பல குற்றங்களுக்காகக் கைது செய்யப்பட்டனர்; அவர்களில் பலர் விடுதலை செய்யப்பட்டுவிட்டனர்.

மாநிலத்தில் நான்கு இடங்களில் கண்ணீர்ப் புகைப் பிரயோகமும் -- இரண்டு இடங்களில் தடியடிப் பிரயோகமும் நடந்தது.

மீனம்பாக்கத்தில் நடைபெற்ற வன்முறைச் செயல்களை அடக்க ஆயுதப் போலீசுப் படையைச் சேர்ந்த 6 அ[illegible] அனுப்[illegible]டது.

மீனம்பாக்கம் [illegible] அருகே வன்மு[illegible] ஒரு பஸ்சுக்குத் தீ[illegible] முன் பக்க இருப்பிடங்களு[illegible] பக்க இருப்பிடங்களும் எரிந்தன.

தீ வைத்தல் உள்ளிட்ட குற்றங்களுக்காகச் சிலர்மீது போலீசார் வழக்குப் பதிவு செய்து புலன் விசாரணை நடத்தி வருகின்றனர்.

இரயில்வே 'கேட்' மீதும் கல்வீச்சு நடைபெற்றது; அதில் பொருத்தப்பட்டிருந்த மின்சார மணி உடைந்து நொறுங்கியது; இதனால் மின்சார இரயில் போக்குவரத்து ஒருமணி நேரம் பாதிக்கப்பட்டது"

பஸ்கள் மீது கல்வீச்சு

எச்சரிக்கைகள் பயனற்றுவிட்டன

போலீசார் நடவடிக்கை --- கமிஷனர் ஷெனாய் விளக்கம்

சென்னை, அக். 21—

எம் ஜி. ஆர். ரசிகர்கள் என்பவர்களும் -- மாணவர்களும் -- சமூக விரோதச் சக்தியினரும் நேற்றும் வன்முறைச் செயல்களில் ஈடுபட்டனர்; இதுபற்றிச் சென்னை நகரப் போலீசுக் கமிஷனர் கே. ஆர். ஷெனாய் கூறியிருப்பதாவது:—

"சென்னை–மீனம்பாக்கம் ஜெயின் கல்லூரி மாணவர்கள் நேற்று அரசு பஸ் ஒன்றுக்குத் தீ வைத்தனர்; இதனால் ரூ 8,000 நட்டம் ஏற்பட்டது; சென்னையிலிருந்து தீயணைக்கும் படையினர் சென்று தீயை அணைத்தனர்.

சேத்துப்பட்டு இரயில் நிலையத்திற்கு அருகில் மின்சார இரயில் மீது கற்கள் வீசப்பட்டன.

சென்னை தியாகராய கல்லூரி மாணவர்கள் சிலர் கல்லூரியை விட்டு வெளியேறி, சாலைகளில் சென்ற அரசு பஸ்மீது கல் வீசினர்; போலீசார் சம்பவம் நடந்த இடத்திற்கு விரைந்து சென்றதும் மாணவர்கள் கல்லூரிக்குள் திரும்பிச் சென்றுவிட்டனர்.

கோடம்பாக்கத்திலுள்ள டி. பி ஜெயின் கல்லூரி மாணவர்களில் சிலர் கல்லூரியை விட்டு வெளியேறி கோடம்பாக்கம் சாலையில் கலவரம் செய்து பொதுமக்களுக்குத் தொல்லை தர முயன்றனர்; அவர்களைப் போலீசார் விரட்டியடித்தனர்.

சென்னை—அண்ணா சாலை அரசினர் கலைக் கல்லூரிக்கு அருகில் பஸ் ஒன்றுக்குத் தீ வைக்கப்பட்டதையொட்டி, பெரியசாமி என்பவர் உட்பட 12 பேர் கைது செய்யப்பட்டிருக்கின்றனர்; கைதானவர்களில் 6 பேர் மாணவர்கள்; அவர்கள் மட்டும் ஜாமீனில் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்; மற்றவர்கள் காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

பச்சையப்பன் கல்லூரி மாணவர்கள் 200 பேர் நேற்று பகல் 12-மணிக்கு காம்பவுண்டுச்சுவர் அருகே வந்து நின்று கொண்டு, பூவிருந்தவல்லி நெடுஞ்சாலையில் சென்று கொண்டிருந்த பஸ்கள்—கார்கள் மற்றும் வாகனங்கள் மீதும், ரோந்து சுற்றிய போலீசு லாரி மீதும் கல்வீச்சு நடத்தினார்கள்; கல்லூரி முதல்வரும்-- போலீசாரும் மீண்டும் மீண்டும் கேட்டுக் கொண்ட பிறகும், மாணவர்கள் கல்வீச்சை நிறுத்தவில்லை.

பிற்பகல் 1-30 மணிக்கு பூவிருந்தவல்லி நெடுஞ்சாலையிலுள்ள 'பெட்ரோல் பங்க்' மீதும கல் வீசப்பட்டது; இதனால் கண்ணாடிகள் --- மின்சார விசிறிகள் மற்றும் பல பொருட்கள் சேதமடைந்தன.

போலீசார் எச்சரிக்கை விடுத்தும் பயன் இல்லாததால் கண்ணீர்ப் புகை வீச்சு நடந்தது; அதைத் தொடர்ந்து அமைதி ஏற்பட்டது.

மாலை 4 மணிக்கு சேத்துப்பட்டு ஆரிங்டன் சாலையில் ஒரு டாக்சி மீது மாணவர்கள் மீண்டும் கல்வீச்சு நடத்தினர்; இதைத் தொடர்ந்து அந்தப் பகுதியைச் சேர்ந்த பொதுமக்களுக்கும் -- மாணவர்களுக்கும் இடையே மோதல் ஏற்பட்டது; உடனே போலீசார் கண்ணீர்ப் புகைக் குண்டுகளை வெடித்து, அமைதி ஏற்படுத்தினர்.

மாலை 4-30 மணியளவில், ஆரிங்டன் சாலையில் இரயில்வே கேட் அருகில் பஸ்கள் -- கார்கள் மற்றும் வாகனங்கள்மீது மாணவர்கள் மீண்டும் கல்வீசத் தொடங்கினர்; கல்வீச்சை நிறுத்துமாறு போலீசார் கேட்டுக் கொண்டனர்; ஆனால், போலீசார்மீது சோடா பாட்டில்களை வீசினர்.

இங்கும் மாணவர்களுக்கு எதிராகப் பொதுமக்கள் திரண்டெழுந்தனர்; போலீசார் தலையிட்டுப் பெரிய மோதல் ஏற்படாமல் தடுத்தார்கள்.

சோடா புட்டிகள் வீசப்பட்டதால் ஒரு சப்-இன்ஸ்பெக்டர், ஒரு ஆயுதப் போலீசுக்காரர் மற்றொரு போலீசுக்காரர் ஆகியவர்கள் காயமடைந்தனர்.

நடக்க இருப்பவை

தி.மு.க. பொதுக்குழுத் தீர்மானங்கள் விளக்கப் பொதுக்கூட்டங்கள்

22--10-72

ஆரணி

நகர தி. மு. க. சார்பில் மாலை 6-30 மணிக்கு கொசம்பாளையம் கருமராசா கோவில் மைதானத்தில்; தலைவர்: கே. பி. சுந்தரம் எம்.சி.; பேசுவோர்: அமைச்சர் ப. உ. சண்முகம், வே. கண்ணன், வீராசாமி எம்.எல்.ஏ., தி. எத்திராசன், ஆர். என். வீரமத்திரன், எம். இராசமாணிக்கம், மு. ந. இராமன் மற்றும் பலர்.

தஞ்சை

நகர தி. மு. க. சார்பில் மாலை 6 30 மணிக்கு திலகர் திடலில்; தலைவர்: எஸ். பெத்தண்ணன்; பேசுவோர்; அமைச்சர் சத்தியவாணிமுத்து, எஸ். டி. சோமசுந்தரம் எம்.பி., எஸ். நடராசன் எம்.எல்.ஏ., பி. எஸ். தங்கமுத்து, வை. சுப்பிரமணியம், இரா. இராசன், கு. சுல்தான், ஏ. வி. பதி எம்.சி., டி. பி. கண்ணன் எம்.சி., டி. கே. கோவிந்தன் எம்.சி., மற்றும் சட்டமன்ற -- நகர்மன்ற உறுப்பினர்கள்.

வருவாய்த் துறை அமைச்சர்

ப. உ. சண்முகம்

நிகழ்ச்சிகள்

அக். 22 இரவு 7-மணி: ஆரணி-பொதுக்கூட்டம்; இரவு 8 மணி: வேலூர்—பொதுக்கூட்டம்.

தாழ்த்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்

சத்தியவாணிமுத்து

நிகழ்ச்சிகள்

அக். 22 மாலை 6-15 மணி: தஞ்சாவூர்—அரிசன நல மாணவிகள் இல்ல மாணவிகளுக்கு சீருடை வழங்குதல்; இரவு 7-30 மணி: தஞ்சைப் பொதுக் கூட்டத்தில் கலந்து கொள்ளுதல்.

அக். 23 இரவு 7-30 மணி: பாபநாசம் -- பொதுக்கூட்டத்தில் பேசுதல்.

உணவுத்துறை அமைச்சர்

ப. நாராயணசாமி

நிகழ்ச்சிகள்

அக். 22 மாலை 6 30 மணி: இராமநாதபுரம் நகர்மன்ற வரவேற்பு; இரவு 7-30 மணி: பொதுக்கூட்டம்.

அக். 23 தஞ்சாவூர்.

அக். 24 காலை: திருவாரூர்; மாலை: மன்னார்குடி.

அக். 25: மாயூரம்.

இடைப்பாடி

நகர தி. மு. க. சார்பில் மாலை 6 மணிக்கு உந்துவண்டித் திடலில்; தலைவர்: வீ. பொன்னுசாமி; பேசுவோர்: புலவர் அறிவுடைநம்பி எம்.எல்.சி., வ. ஆறுமுகம் எல்.எல் ஏ, நா. நடேசன் எம்.சி., ஆர். வி. பெருமாள், மா. பண்டரிநாதன், சேட்டு டி. முத்து, மற்றும் பலர்.

சிதம்பரம்

நகர தி. மு. க. சார்பில் மாலை 6-மணிக்கு டவுன் ஆலில்; தலைவர்: ந. சௌரிராசன் எம்.சி.; பேசுவோர்; கேரள சுந்தரம், வி. மாயவன் எம்.பி., இரத்தின. பாலகுருசாமி, இரா. சக்கரவர்த்தி, பரம. நடேசன், புலவர் முத்து. தமிழரசன், இரெ. சுப்பிரமணியம், இராம. முத்துக்குமரன், செ. பெருமாள் எம்.எல்.ஏ., கோ. துரைராசன், தி. ம. மணி, இரா. சக்ரவர்த்தி, த. மாசிலாமணி, சு. கோவிந்தராசன், துரை. பாலசுப்பிரமணியம், மற்றும் செயற்குழு உறுப்பினர்கள் -- உட்கிளைச் செயலாளர் -- பிரதிநிதிகள் -- கழக நகர்மன்ற உறுப்பினர்கள் -- கழக முன்னணியினர்.

மீஞ்சூர்

வட்ட தி. மு. க. சார்பில் மாலை 6 மணிக்கு; தலைவர்: பே. வி. சாமி; பேசுவோர்: நன்னிலம் நடராசன். அலமேலு அப்பாதுரை, தி. சு. இலட்சுமணன் எம்.பி, பா. நாகலிங்கம் எம்.எல் ஏ., மு. கேசவன். மற்றும் பலர்.

வல்லம்

நகர தி. மு. க. சார்பில் மாலை 6 மணிக்கு மாரியம்மன்கோவில் திடலில்; தலைவர்: துரை. வையாபுரி; பேசுவோர்: திருவை அண்ணாமலை, சு. நாவலர் நம்பி, டி. கே. எஸ். வீரப்பன், கோ. தம்பிதுரை, ரெ. ரத்தினம், மற்றும் பலர்.

பெரியபாளையம்

பின்னிலை மாணவர் விடுதி திறப்பு விழா

23—10—72 மாலை 8 மணியளவில், பெரியபாளையம் பின்னிலை மாணவர் விடுதி திறப்பு விழா, தோட்டக்காரத் தெருவில் நடைபெறும்; வரவேற்பு: ஆர். எஸ். ஜான்; தலைவர்: கா. வேழவேந்தன் எம்.எல்.ஏ.; திறப்பாளர் தொழில் அமைச்சர் செ. மாதவன்; வாழ்த்துரை: சௌத்திரி, ஏ. ஜி. ஜெயராமன், இலட்சுமணன் எம்.பி., கண்ணப்பன்.

மறைமலை அடிகளார் விழா

சென்னை -- எஸ்பிளனேடு ஒய். எம். சி. ஏ. பட்டிமன்றச் சார்பில் 23—10—72 மாலை 6 மணிக்கு மறைமலை அடிகளார் விழா நடைபெறும்; தலைவர்: தவத்திரு. குன்றக்குடி அடிகளார் எம்.எல்.சி.; பேசுவோர்: டாக்டர் சி பாலசுப்பிரமணியன், ஔவை து. நடராசன்.

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ருப்பதன் விளைவாக நடப்பு ஆண்டில் செல்வ வரி மூலம் ரூ. 43 கோடி கிடைக்கும் என்று மதிப்பிடப்படுகிறது.

"ரூ 25 இலட்சத்திற்கு அதிகம் செல்வமுள்ளவர்கள் என்று மதிப்பீடு செய்யப்பட்டவர்கள் 1970-ம் ஆண்டு இறுதியில் 318 பேர் இருந்தனர்; அவர்களில் மிக அதிகம் பேர் பம்பாயில் உள்ளனர்;

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக திரு. இரா. செழியன் எம்.ஏ. எம்.பி. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு, [illegible] இதழ் வெளியிடப்படுகிறது.